களஞ்சியம் KALANJIYAM - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal
eISSN 2456-5148
Vol. 04 Issue: 03 August 2025

# தொ.ப. என்ற அறிஞர்
## The Scholar Tho.pa

**தே. பெருமாள்,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரா - 517426.
Email- perumalperumal4656@gmail.com ORCID-0009-0000-6709-8514

**முனைவர் வ.கலைஅரசி, நெறியாளர்,**
உதவிப் பேராசிரியர், பதிப்புத்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், சித்தூர் மாவட்டம், ஆந்திரா - 517426.

**PERUMAL D,**
*Research scholar (Full time), Reg.no:2024PHDFTTM05, Department of Tamil Language And Translation studies, Dravidian University, Kuppam-517426, AP, India.*
*Email- perumalperumal4656@gmail.com, ORCID-0009-0000-6709-8514.*

**Dr. V.kalaiyarasi,**
*Research Guide, Assistant professor, Publications, Dravidian University, Kuppam-517426, AP. Email- vkarrasidu@gmail.com.*

**Abstract**

Although tho. Paramasivan is a professor in the Tamil department, his unique identity is that of a cultural researcher. He plays an important role in anthropology, folk customs, religion, and ritual studies. One of his important books is the research book Alaghar Koil. He can accept Periyar with 95 percent. He accepted C. Su Mani as his spiritual teacher. He explains political subtleties through interviews and writings with a variety of opinions. He does not leave out not only cultural studies but also literature. He explains it very clearly and visually on the topic of Naal Malargal. We will see subtle opinions in this article titled Tho.Pa a scholar.

**Keywords:** Culture, Folk Customs, People's Lifestyle, Religion

**ஆய்வுச்சுருக்கம்:**

தொ. பரமசிவன் தமிழ்த்துறையில் பேராசிரியர் என்றாலும், பண்பாட்டு ஆய்வாளர் என்பதே தனித்த அடையாளம். மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல், சமயம், சடங்கு சார்ந்த ஆய்வுகளுக்கு முக்கிய பங்கு வகிக்கிறார். இவரின் முக்கியமான நூல்களில் ஒன்று அழகர் கோயில் என்ற ஆய்வு நூல். பெரியாரை 95 சதவீகிதம் ஏற்றுகொள்ள கூடியவர். சி.சு மணியை தன் ஞானகுருவாக ஏற்றுக்கொண்டார். அரசியல் சார்ந்த நுணுக்கமான கருத்துகளை நேர்காணல் மூலமாகவும், எழுத்துகள் மூலமாகவும் பலதரப்பட்ட கருத்துகளோடு விவரிக்கிறார். பண்பாட்டு சார்ந்த ஆய்வுகளில் மட்டுமல்லாமல் இலக்கியத்தையும் விட்டுவைக்கவில்லை. நாள் மலர்கள் என்ற தலைப்பில் மிக தெளிவாக பார்வையில் விளக்குகிறார். தொ.ப என்ற அறிஞர் என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் நுணுக்கமான கருத்துகளை காண்போம்.

**கலைச்சொற்கள்:**
பண்பாடு, நாட்டார் வழக்காற்றியல், மக்கள் வாழ்வியல், சமயம்.

**முன்னுரை:**

20-ஆம் நூற்றாண்டில் பண்பாட்டை பற்றி பேசக்கூடிய ஆய்வாளர்கள் நிறைய பேர் இருந்தாலும், பண்பாட்டின் குரலாக இன்றுவரை ஒலிக்கக்கூடியது தொ.ப.வின் குரல். தெய்வங்கள் பற்றியும் அதை சார்ந்த மக்களையும் ஆராய்வதே முக்கிய பணியாக இருந்தது. நாட்டார் வழக்காற்றியல், சமயம், சடங்கு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் சார்ந்த ஆய்வுகளில் தன் பங்கை மிக தெளிவான எல்லையோடு முன்வைக்கிறார். தொ.ப.வை எவ்வாறு எல்லாம் பார்க்க முடியும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**தொ.ப. அறிமுகம்**

நாட்டார் வழக்காற்றியலில் பல ஆய்வாளர்கள் இருந்தாலும், இருபதாம் நூற்றாண்டில் தன் ஆய்வு புலமையில் தன் பெயரை நிலைநிறுத்தி கொண்டவர் தொ.பரமசிவன். நா.வானமாமலை, மயிலை சீனி.வேங்கடசாமி, மு.இராகவையங்கார் ஆகியோரை தன் முன்னோடிகளாக வைத்து தன் ஆய்வை மேற்கொண்டார். தன் ஞானகுருவாக சி.சு மணியை ஏற்றுக்கொண்டார்.

தொ.ப. 1950-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் பிறந்தவர். சிறு வயதிலிருந்தே தன் அம்மா சொல்லக்கூடிய கதைகளை கேட்டு ஆய்வுத் துறையில் கால்பதித்தவர். இளங்கலைப் பொருளாதாரப் பட்டமும் முதுகலைத் தமிழ் பட்டமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். இளையான்குடி ஜாகிர் உசேன் கல்லூரியிலும் மதுரை தியாகராசர் கல்லூரியிலும் தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பணியாற்றினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்துறைத் தலைவராகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றார்.

இவர் ‘அழகர் கோயில்’ என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டார். கோயில் பற்றிய ஆய்வுகளில் தலபுராணம், கோயில் கட்டமைப்பு, வழிபாட்டு முறைகள் என்று தான் சொல்லப்பட்டு வந்தன. ஆனால் தொ.ப.வின் அழகர் கோயில் ஆய்வில் என்னென்ன சமூகத்தார் கோயிலுக்கு வருகிறார்கள், எவ்வளவு சதவீத மக்கள் வருகிறார்கள் என்ற கருத்துக்களை முறையாக ஆராய்ந்து பதிவு செய்துள்ளார். பல கிலோமீட்டர் நடைபயணத்தை செய்தே மக்களுடன் மக்களாக கலந்து பேசி தன்னுடைய ஆய்வை மேற்கொண்டார். இவருடைய ஆய்வுகள் பெரும்பாலும் கட்டுரை, நேர்காணல்களாக தான் வெளிவந்துள்ளன. பண்பாடு, மானுடவியல், வரலாறு சார்ந்த ஆய்வளாரக திகழ்ந்தவர். பண்பாடு சார்ந்த ஆய்வே முக்கியமாகக் கருதப்படுகிறது. தொ.பரமசிவன் புத்தகங்கள் சார்ந்த ஆய்வினை மேற்கொள்பவரல்ல. கள ஆய்வுகளை ஆழமாக மேற்கொண்டவர்.

அழகர் கோயில், அறியப்பாடத தமிழகம், தெய்வங்களும் சமூக மரபுகளும், பண்பாட்டு அசைவுகள், சமயங்களில் அரசியல், சமயம், நாள் மலர்கள், விடுபூக்கள், உரைக்கல், பரண், செவ்வி, வழித்தடங்கள், தெய்வம் என்பதோர், டங்கல் எனும் நயவஞ்சம், இது தான் பார்ப்பனியம், இந்து தேசியம், நான் இந்துவல்ல - நீங்கள், பூனா ஒப்பந்தம் ஒரு சோகக்கதை, சங்கரமடம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் போன்றவை படைப்புகள் அவரது படைப்புகளாகும்.

**பெரியாரின் சிந்தனையாளர்:**

பெரியாரின் சிந்தனை கொண்டவர் தொ.ப. அவர் கடவுள் மறுப்பாளராகினும் அவருடைய ஆய்வுகள் பெரும்பாலும் கோயில்கள் பற்றியதாகவே காணப்படுகிறது. தொ.ப.விற்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. அவர் கூறுகையில், நான் கடவுள் இல்லை என்று சொல்லவில்லை. இருந்தால் நல்லது என்றுதான் சொல்கிறேன் என்கிறார். ஆனால் அவர் வீட்டில் கண்ணன் புகைப்படம் உள்ளது. இதனைப் பற்றி அவரிடம் கேட்டபோது கண்ணன் என் நண்பன் என்று நகைச்சுவையாக கூறினார்.

பெரியார், கடவுள் வழிபாட்டை தான் எதிர்கிறார். தெய்வ வழிபாட்டை எதிர்க்கவில்லை. கடவுள் வழிபாடு என்பது ஆகமநெறி வழிபாட்டு முறை, தெய்வ வழிபாடு என்பது நாட்டார் வழிபாட்டு முறை. பெரியார் விநாயகர் சிலையைத் தான் உடைத்தார். சுடலைமாடன், காத்தரவாயன் சிலையை உடைக்கவில்லை. ஏனென்றால், மக்களை நாட்டார் தெய்வங்கள் அடிமைபடுத்தவில்லை. ஆகம நெறிகள் மக்களை அடிமைபடுத்தி சாதிய பார்வையில் மக்களை முடக்குகிறது. ஆகவே பெரியாரின் நோக்கம் மக்கள் விடுதலை தான்.

**தொ.ப.வின் பண்பாட்டு ஆய்வு முறை:**

சங்க இலக்கியம், புராணம், கல்வெட்டுகள் இவற்றையெல்லாம் மாற்றி மக்களின் வாழ்வியல், பழக்கவழக்கங்கள், நாட்டார் வழக்காற்றியல், சொல்லாடல் இவற்றை வைத்து மக்களின் வரலாற்றை பதிவு செய்தார் தொ.ப. பண்பாடு என்பது வரலாற்றை பார்ப்பது மட்டுமல்ல. இன்றைய பண்பாட்டை பாதுகாப்பதாகும். இன்றைய பண்பாடு நாளைய வரலாற்றுக்கு முன்னெடுத்து செல்லும் என்பது தான் அதற்கான காரணம் என்கிறார். பண்பாடு என்பது தொண்மையான அசைவுகளின் தொடர்ச்சி.

மக்களோடு மக்களாக இருக்க விரும்பிய தொ.ப. பல இலட்சம் கிலோமீட்டர் நடந்து தன் ஆய்வு பரப்பை விரிவுபடுத்தினார். ஆய்வை அடுக்களையில் இருந்துதான் தொடங்கவேண்டும் என்கிறார். தொ.ப. தமிழரின் பண்பாட்டை கீழிலிருந்து மேலாக வாசிக்க வேண்டும் என்ற கோணத்தில் ஆய்வை மேற்கொண்டார். பண்பாடு, மொழி மற்றும் வரலாறு குறித்த அடித்தள மக்களின் குரலை யதார்த்தமாகப் பேசுகிறார். மக்களிடம் நேரடியாக சென்று வாய்மொழி வழக்காறுகள், பழமொழிகள், பாடல்கள் மூலம் தனது ஆய்வுப் பரப்பை விரிவுபடுத்தினார். மஞ்சள் பூசுதல், மஞ்சள் குளித்தல் போன்ற பண்பாட்டு சார்ந்த ஆய்வினை மேற்கொண்டார். மஞ்சள் மகிமையில் விறலி என்ற சொல்லுக்கான பொருளை அறிவார்ந்த சிந்தனையில் முன்வைக்கிறார். பேரன் பேத்திக்கு உரிய கடமைகள் குறித்த அவரது சொற்கள் வியப்பை ஏற்படுத்துகிறது.

தொ.ப. மக்களின் வாழ்க்கைச் சூழலிருந்து நேரடித் தகவல்களை சேகரித்து ஆய்வு செய்தார். அவரது பண்பாட்டு ஆய்வுகள் மக்களின் வட்டார மொழி, பழக்கவழக்கங்கள், கிராமிய கலைவிழாக்கள், சடங்குகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு சடங்கையும் நம்பிக்கையின் அடிப்படையில், அறிவியலின் அடையாளாமாக பார்த்தார். ஐயனார் வழிபாடு குறித்து அவர் செய்த ஆய்வு தமிழரின் கிராமிய பாதுகாப்பு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. தன்னுடைய ஆய்வுகளில் சிறுபான்மை சமூகத்தவர்களை உள்ளடக்கிய தமிழ் பண்பாட்டையும் கட்டமைக்கிறார்.

தொ.ப.வின் இலக்கிய பங்கு:

தொ.ப. இலக்கியத்திலும் தனது பங்களிப்பை அளித்துள்ளார். சங்க இலக்கியம், கம்பன், பாரதி, பாரதிதாசன், கா.சு. பிள்ளை, புதுமைப்பித்தன், தெ.பொ.மீ, புறநானூறு மற்றும் நாட்டுபுற இலக்கியங்கள் பற்றியும் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். தமிழ்ப் புத்தாண்டு என்ற கட்டுரையில் தொ.ப. தைப்பூசம் தான் தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடுகிறார்.

திராவிட இயக்க சிந்தனையாளராக இருந்தாலும், தனது நேர்காணல்களில் திராவிட இயக்கங்களைக் கலைத்துவிட்டுப் புது இயக்கங்கள் ஏற்படுத்தலாம். அதற்கான காரணம், இப்பொழுது உள்ள திராவிட இயக்கங்களால் பெரியாரின் கொள்கைகளை மேலெடுத்து போக முடியாது என்கிறார். ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்ற கருத்தை தொ.ப முற்றிலும் மறுக்கிறார். இந்த கருந்து மக்களுக்கு விரோதச் சித்தாந்தம் என்று பதிவு செய்துள்ளார். ஒன்றே குலம் என்றால் இந்தியர், ஒருவனே தேவன் என்றால் இராமன் என்கிறார்கள். ஆனால் இந்தியா பன்முகத் தன்மைக்கொண்டது. இக்கருத்தில் நாட்டார் தெய்வங்களின் வழிபாட்டுச்சித்தாந்தம் ஏற்புடையதாக இல்லை. தொ.ப. திருநாவுக்கரசர் மீது மிகவும்

மதிப்புகொண்டவர். நாவுக்கரசரின் சமூகப் பணிகள் வேதமரபின்றி மக்களையும் இணைத்து தமிழ் சமூகத்திற்கு தொண்டாற்றி சைவத்தினை முன்னிறுத்திய காரணமாக இருக்காலாம்.

பிற சமூகங்களோடு ஒப்பிடுகையில் தமிழர்களின் தனி அடையாளமாக விளங்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் தாய்மாமன் என்கிற உறவு போன்றவை தமிழ்ச் சமூகத்தில் நெருக்கமான உறவாக இருந்துவருகிறது. இறந்தோருக்காக செய்யப்படும் சடங்குகளில் தொட்டு வணங்கும் பழக்கம் தமிழர்களிடையேதான் உள்ளது என்று கூறுகிறார். பண்பாட்டை மட்டும் பேசாமல், மொழி பற்றியும், இதழ்கள் பற்றியும் தனது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். எப்படியெல்லாம் இதழ்கள் மனித மனதை மாற்றுகிறது என்பதை தமிழில் ‘இதழியல்’ என்ற கட்டுரையின் வழி விளக்குகிறார்.
தொ.ப.வின் கட்டுரைகளும் நேர்காணல்களும்:

இந்து என்ற சொல் இந்திய மொழிகளில் எந்த மொழியிலும் கிடையாது. அந்த சொல் வெள்ளைக்காரன் கண்டுபிடித்த சொல். இந்து என்ற சொல்லானது ஐரோப்பியர்கள் பயன்படுத்திய சொல். இந்து என்ற சொல்லுக்கு எந்தவிதமான வரைவிலக்கணமும் கிடையாது.

தமிழாராய்ச்சியின் வளர்ச்சி உரையில் திராவிட என்னும் சொல் வடமாநிலங்களுக்குச் சென்ற தமிழ் பிராமணர்களை குறிப்பதற்காக வழங்கப்பட்ட சொல் என்று ஸ்ரீனிவாச அய்யங்கார் (Tamil Studies) குறிப்பிடுவதாக தொ.ப கூறுகிறார். தொ.ப.விற்கு மிகவும் பிடித்தது ‘சமயங்களில் அரசியல்’ என்ற தலைப்பில் தான் வெளியிட்ட நூல்தான். சமணம், பௌத்தம், பாசுபதர், காளமுகர், மாவிரதிகள், சைவம், வைணம், என்ற சமய நெறிகளுக்கு எதிராக தோன்றிய மதம் தான் வைதீகம் என்கிற இந்து மதம் என்கிறார்.

கீரை வறுமையின் உணவாகும். அதனால் தான் தெய்வங்களுக்கு கீரையை உணவாக படைப்பதில்லை. ஏனெனில் தெய்வங்கள் ஏழ்மையான தெய்வங்கள் அல்ல. தொ.ப.வின் இக்கருத்து சிறுதெய்வங்களுக்குப் பொருந்தாது. மாரியம்மனுக்கு கீரை உணவாக படைப்படுகிறது. பூமிக்கு கீழே விளையும் கிழங்கு வகைகளை பார்ப்பனர்கள் உண்பதில்லை. பெருந்தெய்வ கோயில்களுக்குள்ளும் அவை அனுமதிக்கபடுவதில்லை. கிழங்கு வகைகள் பிறப்பினால் கீழ்பட்டவை என்ற கருத்தியலை கொண்டவர்கள் பார்ப்பனர்கள். மகிழ்ச்சியின் குறியீடாக சாப்பிட்டு முடித்தவுடன் வெற்றிலை, பாக்கு உண்பது மரபாக உள்ளது. அதனால் தான் இறந்தவர்களின் வாயில் வெற்றிலை, பாக்கு வைத்து அவர்களின் வாய்களைக் கட்டிவிட்டு மகிழ்ச்சியாக மறுஉலகம் செல்ல அனுப்பி வைக்கின்றனர்.

**முடிவுரை:**

தொ.ப.வை பொறுத்தவரை தன் ஆய்வு எல்லையை நன்குணர்ந்தவர். ஆய்வு நூல்களில் புதிய கருதுகோளை பயன்படுத்தாதவர். பலருக்கு புதிராகவும் விளங்குகிறார். நாட்டார் வழக்காற்றியல், பண்பாடு சார்ந்த ஆய்வுகளில் மிகநுட்பமான கருத்துகளை வழங்கியுள்ளார். கோயில் பற்றிய ஆய்வுகளை செய்தாலும் திராவிட இயக்க சிந்தனையிலிருந்து அவர் என்றுமே மாறியதில்லை. இன்றைய ஆய்வாளர்களும் பின்பற்றும் வண்ணமாக பல தெளிவார்ந்த கருத்துகளை எடுத்துரைத்துள்ளார்.

**பார்வை நூல்கள்:**


1. இந்திய இலக்கிய சிற்பிகள் – அ.மோகனா
2. அழகர் கோயில் - தொ. பரமசிவன்
3. அறியப்பாடாத தமிழகம் - தொ. பரமசிவன்
4. நான் இந்துவல்ல நீங்கள் - தொ. பரமசிவன்
5. மறுபடியும் மறுபடியும் பெரியாரிடம் - தொ. பரமசிவன்

***References:***


1. Mokana, A. Indian Literary Gems.
2. Paramasivan, T. Aazhakar Koyil.
3. Paramasivan, T. Arivupada Thamizhagam.
4. Paramasivan, T. Nan Indhu Vallan Ninggal.
5. Paramasivan, T. Maruppadi Maruppadi Periyaridam.


License : Copyright (c) 2025 Author :

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.